JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - PW-3   Witness
for Prosecution

CC No. 69/2021   Crime No.   Station   Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-3-ரங்கநாதன் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 26th day of August 2025 | | | |

**1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 4 மற்றும் 5 எதிரிகள் இறப்பு. 3 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் கோயமுத்தூர், உடையாம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு, பீரோ தயாரிக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஜெயக்குமார் எனக்கு நண்பர். கடந்த 11.12 .2015 ஆம் தேதியன்று ஜெயக்குமார் என்னிடம் வந்து இரிடியம் பொருள் வாங்குவதற்காக தன்னுடன் ஈரோடு வருமாறு என்னை அழைத்தார். அப்போது ஜெயக்குமார் என்னிடம் தான் ரூ.25,00,000/- பணமும், தனது நண்பர் துளசிதாஸ் ரூ.20,00,000/- பணமும் எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமாரிடம் கொடுத்து தாங்கள் ஏமாந்து விட்டதாக என்னிடம் கூறினார். எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் இருவரும் அத்தாணி, தேவன் தோட்டத்தில் இருப்பதாகவும், அவர்களை பார்ப்பதற்காக தன்னுடன் வருமாறும் ஜெயக்குமார் என்னிடம் கூறினார். நான் எனது வண்டியில் ஜெயக்குமார், ரவிக்குமார், பாலதண்டாயுதபாணி, ராஜேந்திரன் மற்றும் ராஜா தெக்கன் ஆகியோர்களை அழைத்துக் கொண்டு கோவையிலிருந்து தேவன் தோட்டத்திற்கு வந்தோம். அப்போது எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் அங்கு இருந்தார்கள். அவர்களுடன் சில ஆட்களும் இருந்தார்கள். ஜெயகுமார் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமாரிடம் எங்களது பணத்தை கொடுங்கள் இல்லாவிட்டால் பொருளை கொடுங்கள் என்று கேட்டார். அப்போது ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் இருவரும் பொருளும், பணமும் கொடுக்க முடியாது என்றும் உங்களால் என்ன செய்ய முடியுமோ செய்யுங்கள் என்றும் கூறி தகாத வார்த்தைகளால் பேசினார்கள். பின்னர் நானும், என்னுடன் வந்த மற்ற 6 நபர்களும் ஆப்பக்கூடல் காவல் நிலையம் வந்தோம். ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் எங்களை எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் இருவரையும் அடையாளம் காட்டுமாறு கூறினார்கள். நாங்களும் போலீசாரை தேவன் தோட்டத்திற்கு அழைத்துச் சென்று

RAJKUMAR J  Digitally signed by RAJKUMAR J Date: 2025.08.26 06:07:58 +0530

அவர்களை அடையாளம் காட்டினோம். பின்னர் ஜெயக்குமார் ஆப்பக்கூடல் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். எதிரிகள் ரமேஷ்குமார் மற்றும் மகேஷ் குமாரை எனக்கு அடையாளம் தெரியும். அவர்கள் தற்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார்கள். இந்த வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். W4

**1மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கோயம்புத்தூரில், உடையாம்பாளையத்தில் வசித்து வருகிறேன். ஜெயக்குமார் சௌரி பாளையத்தில் குடியிருந்து வருகிறார். எனது வீட்டிற்கும் ஜெயக்குமார் வீட்டிற்கும் சுமார் 1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால், சரிதான். ஜெயக்குமாருக்கும், எதிரிக்கும் உள்ள வரவு செலவு குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால், சரிதான். எதிரிகள் தேவன் தோட்டத்திற்கு வருவது குறித்து எனக்கு யாராவது தகவல் தெரிவித்தார்களா என்றால், சந்திரன் என்பவர் தெரிவித்தார். சந்திரன் எந்த ஊரைச் சார்ந்தவர் என்றால், கோபியை சார்ந்தவர். சந்திரன் எதிரிகள் வருவது குறித்து எதற்காக என்னிடம் தெரிவித்தார் என்றால், நான் சந்திரனிடம் பணம் ஏமாந்தது தொடர்பாக கூறியிருந்தேன். எதிரிகள் வந்தால் கூறுமாறும் கூறி இருந்தேன். மேற்படி விஷயத்தை நான் போலீஸ் விசாரணையில் சொன்னேனா என்றால், சொன்னேன்.

நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும்போது காவல் நிலையத்தில் எதிரிகள் இருந்தார்கள் என்றால், சரிதான். புகார் கொடுப்பதற்கு முன்பே போலீசார் எதிரிகளை விசாரித்துக் கொண்டிருந்தார்கள் என்றால், சரிதான். விசாரித்து முடித்துவிட்டு தான் ஜெயக்குமாரிடம் புகார் பெற்றார்கள் என்றால், சரிதான். நான் போலீஸ் விசாரணையில் மேற்படி நபர்கள் 7 பேர்களும் ஒன்று சேர்ந்து கொண்டு ஜெயக்குமாரையும் அவருடன் வந்த எங்களையும் பார்த்து "ஏண்டா தேவடியா பசங்களா, கண்டாரோலி பசங்களா, நீங்க என்ன பெரிய இவங்களாடா, நீங்க அனுப்பிய பணத்தை எல்லாம் தர முடியாது" என்று சத்தம் போட்டு பயங்கரமாக தகராறு செய்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் நான் கூறினேன் என்றால், சரியல்ல. நான் கூறவில்லை.

நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் ஜெயக்குமார் என்பவரிடம் தேவன் தோட்டத்திற்கு செல்லவில்லை என்றாலும், ஜெயக்குமார் எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.26 06:08:07 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - PW-4 Witness for Prosecution

CC No. 69/2021 Crime No. Station Appakodal

| | | | |
|---|---|---|---|
| Name | Pw-4-துளசிதாஸ் | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 26th day of August 2025 | | | |

**1, 2 மற்றும் 7 எதிரிகள் ஆஜர். 4 மற்றும் 5 எதிரிகள் இறப்பு. 3 மற்றும் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் கோயம்புத்தூர் மாவட்டம், கணபதியில் குடியிருந்து கொண்டு ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். கோபிசெட்டிபாளையத்தில் வசித்து வரும் சந்திரன் என்பவரை ரியல் எஸ்டேட் தொழில் மூலமாக எனக்கு தெரியும். சந்திரன் என்பவர் மூலமாக எனக்கு எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் சுரேஷ்குமார் ஆ ஆக்கியவர்கள் அறிமுகமானவர்கள். அப்போது ரமேஷ் குமார் மற்றும் சுரேஷ்குமார் இருவரும் டெல்லியில் Kin Fin Service Private Ldt என்ற நிறுவனம் உள்ளதாகவும், அந்த நிறுவனத்திற்கு பணம் கட்டினால் தான் அவர்கள் இரிடியும் பொருளை காண்பிப்பார்கள் என்றும் கூறினார்கள். அதன்படி நான் 07.09.2015ஆம் தேதியன்று மேற்படி டெல்லி நிறுவனத்திற்கு கோவை நஞ்சப்பா சாலையில் உள்ள கரூர் வைஸ்யா வங்கியில் உள்ள எனது கணக்கிலிருந்துKin Fin Service Private Ldt நிறுவனத்தின் கணக்கிற்கு ரூ.20,00,000/- பணத்தை நான் NIFT மூலம் செலுத்தினேன். அன்றைய தினமே அ.சா.1 ஜெயக்குமார் தான் கணக்கு வைத்துள்ள சிட்டி வங்கியில் இருந்து மேற்படி டெல்லி நிறுவனத்தின் வங்கி கணக்கிற்கு ரூ.25,00,000/- பணத்தை அனுப்பினார். பின்னர் 09.09.2015 ஆம் தேதியன்று எதிரிகள் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் இருவரும் இரிடியம் பொருளை கொடுப்பதற்காக என்னையும் ஜெயக்குமாரையும் அன்னூர், மேட்டுப்பாளையம் சாலைக்கு வருமாறு கூறினார்கள். நாங்கள் இருவரும் அவர்கள் குறிப்பிட்ட இடத்திற்கு சென்றோம். ஆனால் அங்கு அவர்கள் இருவரும் இல்லை. பின்னர் அ.சா.1 ஜெயக்குமார் ரமேஷ் குமார் மற்றும் மகேஷ் குமார் மீது போலீசில் புகார் கொடுத்துள்ளதாக கேள்விப்பட்டேன்.

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2025.08.26 06:08:18 +0530

நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ள வெள்ளை சட்டை அணிந்திருக்கும் நபர் ரமேஷ் குமார் ப்ரவுன் சட்டை அணிந்திருக்கும் நபர் மகேஷ் குமார் என்று சாட்சி அடையாளம் காட்டுகிறார் . பின்னர் போலீசார் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால், சரிதான். நான் எனது தொழிலை கோபிசெட்டிபாளையம் மற்றும் கோயம்புத்தூரில் செய்து வருகிறேன். கோபியைச் சேர்ந்த கொளப்பலூர் செல்வம் எனக்கு தொழில் ரீதியாக தெரியும் என்றால், சரியல்ல. எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றாலும், கோபியை சேர்ந்த கொளப்பலூர் செல்வம் எனக்கு தெரியும் என்றாலும், அவ்வாறு தெரியும் என்று இந்த நீதிமன்றத்தில் சொன்னால் இந்த வழக்கு பாதிக்கப்படும் என்பதால் தெரியாது என்று சொல்கிறீர்கள் என்றால், சரியல்ல. சந்திரன் என்பவரை எனக்கு எப்படி தெரியும் என்றால், ரியல் எஸ்டேட் தொழில் ரீதியாக எனக்கு தெரியும்.

மேற்படி சந்திரன் கோபிசெட்டிபாளையத்தைச் சார்ந்தவர். 1 மற்றும் 2 எதிரிகளை எனக்கு சந்திரன் மூலம் தெரியும் என்பதை நான் எனது போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால். சொல்லியுள்ளேன். ஜெயக்குமாரிடம் இரிடியம் வியாபாரம் செய்யலாம் என நான் தான் கூறினேன் என்றால். சரிதான். 07.09.2015 தேதியன்று பண பரிவர்த்தனை செய்யும்போது என்னுடன் 1 மற்றும் 2 எதிரிகள் எதிரிகள் வந்தார்களா என்றால், வரவில்லை. ஜெயக்குமார் பணம் அனுப்பும்போது அவருடன் யார் இருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் எதிரியின் வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பவில்லை என்றால், சரிதான்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால். B.A படித்துள்ளேன். ஜெயக்குமார் பொறியியல் படிப்பு படித்துள்ளார். வங்கியில் பண பரிவர்த்தனை செய்யும்போது அதில் உள்ள கணக்கு உள்ளதா என்று பார்த்து தான் பண பரிவர்த்தனை செய்வார்கள் என்றால், சரிதான். நான் பணம் அனுப்பியதாக சொல்லும் Kian Fin Services Pvt Ltd டெல்லியில் உள்ளது என்றால், சரிதான். அதற்கு முகவரி உள்ளது என்றால், சரிதான். மேற்படி Kian Fin Services Pvt Ltd நிறுவனத்திற்கு Board of Directors உள்ளார்கள் என்றால், சரிதான். இரிடியும் போன்ற பொருட்களை தனி நபர்கள் யாரும் வாங்கி விற்கக் கூடாது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால், சரிதான். 07.09.2015 ஆம் தேதி பணம் அனுப்பிவிட்டு 09.09. 2015 ஆம் தேதி அன்னூர் மேட்டுப்பாளையம் ரோட்டில் எதிரிகளை பார்க்க அங்கு சென்றபோது அங்கு எதிரிகள் இல்லை என்பதை நான் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான்.

மேற்படி 09.09.2015 ஆம் தேதி எதிரிகள் அங்கு இல்லை என்று நான் தனியாக போலீசில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரிதான். அந்த சமயம் ஜெயக்குமார் என்பவரும் புகார்

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.26 06:08:29 +0530

கொடுக்கவில்லை என்றால், சரிதான். 09.09.2015 ஆம் தேதிக்கு பின்னிட்டு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எதிரிகள் எங்களை ஏமாற்றவில்லை என்றாலும் ,கொளப்பலூரைச் சேர்ந்த செல்வம் என்பவர் சொல்லித்தான் நாங்கள் பணம் அனுப்பினோம் என்றாலும், இந்த சம்பவத்திற்கு கொளப்பலூரைச் சேர்ந்த செல்வமும், நானும்தான் காரணம் என்றாலும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், சரியல்ல. நானும், கொளப்பலூரை சேர்ந்த செல்வமும் தான் வழக்கிற்கு அடிப்படை காரணம் என்பதால் அதனால் தான் நாங்கள் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால், போலீசார் என்னை தொலைபேசி மூலம் விசாரித்தார்கள். என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றால், சரிதான் . நான் சொல்வதுபோல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், ஜெயக்குமார் சொல்லித்தான் மேற்படி சங்கதிகளை நான் சொல்கிறேன் என்றால், சரியல்ல. 1 மற்றும் 2 எதிரிகளை 2015 ஆம் ஆண்டிற்கு பின்னிட்டு தற்போது தான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன் என்றால், சரிதான். நான் சொல்வது தவறு என்றாலும், போலீசார் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டி தான் ஆஜர் எதிரிகளை தெரியும் எனக்கு என்றாலும், அதனால் தான் அவர்கள் அணிந்திருக்கும் ஆடையை காட்டி அடையாளம் காட்டுகிறேன் என்றால், சரியல்ல.

**மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.08.26 06:08:39 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.